2nd November 1962]

* *1095* **கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழை ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் அரசு சட்ட மன்ற உறுப்பினர்களிடம் ஆங்கிலத்தில் கடிதப் போக்குவரத்து செய்வதைத் தவிர்க்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : So far, the 'Tamil Scheme ' has been introduced in the offices up to and inclusive of the district level, and the communications from such offices will be in Tamil. Communications from the other Government offices will also be in Tamil as and when the scheme is introduced in those offices.

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழிலே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலே **Heads of Departments** என்பதற்கு " துறைத் தலைவர்கள் அலுவலகங்களில் " என்று போடப்பட்டிருக்கிறது. " தலைமைக் காரியாலயங்களில் " என்று போட்டால் என்ன ? " துறைத் தலைவர்கள் அலுவலகங்கள் " என்று சொன்னால் மண்டைக் குழப்பம் ஏற்படுவதாக இல்லையா ? (சிரிப்பு). இந்த தமிழ் எப்படி வந்தது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வியாதியைத் தீர்ப்பதற்கு மருந்து சாப்பிட்டால் முதலில் குமட்டுகிறது. அப்புறம் சரியாகப் போய்விடும். அம்மாதிரித்தான் இங்கேயும். " துறைத் தலைவர் " என்ற வார்த்தையில் தவறுதல் ஒன்றுமில்லை. பழக்கத்திற்கு வந்தால் சரியாகப் போய்விடும்.

கல் உடைக்கும் மலைகள்

* *1096* **கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. முனு ஆதி சார்பாக) :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல் உடைக்கும் மலைகளையெல்லாம் அந்தந்த ஊராட்சி மன்றங்களின் அதிகாரத்திற்கோ அல்லது யூனியன் கவுன்சில் அதிகாரத்திற்கோ விட உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The matter is under the consideration of the Government.

பாசன வாய்க்கால்கள்

* *1097* **கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரியின் பழமையான பாசன வாய்க்கால்கள் பூராவையும் நவீனப்படுத்தும் உத்தேசமுண்டா ?

(இ) அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?